IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SASIKALA |
| FATHER'S NAME | : | SASIKUMAR |
| VILLAGE | : | KILITHANPATTARAI |
| OCCUPATION | : | PRAIVATE |
| AGE | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22nd day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கிளித்தான்பட்டறையில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் எனது தந்தை. 18.12.2019 ம் தேதி இரவு 7.15 மணிக்கு நான் செங்குட்டையில் இருந்த போது எங்கள் கிராமத்தை சேர்ந்த டெய்லர் சுப்ரமனி என்பவர் எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டுள்ளதாக நேரடியாக வந்து தகவல் சொன்னார். உடனே நானும் எனது அம்மா ராணி , எனது அக்கா பரமேஸ்வரி ஆகியோர் செங்குட்டை சத்திரம்தெரு அனுஸ் ேஹாட்டல் அருகே சென்று பார்த்த போது எனது தந்தை தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னார் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து போலிசார் தந்தை உடலை மீட்டு ஆம்புலன்ஸ் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவ இடத்தில் அரசு பேருந்து தனியாக நிறுத்தி வைத்திருந்தார்கள். சம்பவம்தொடர்பாக நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னுடையது தான். அது அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு தகவல் அடிப்படையில் தெரியும் நேரடியாக எனக்கு தெரியாது. போலிசார் எழுதிய புகார மனுவில் நான் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். இறந்த நபரின் கவன குறைவால் விபத்து ஏற்பட்டது என்றும் நஷ்ட ஈடு பெற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | RANI |
| HUSBAND NAME | : | SUBRAMANI |
| VILLAGE | : | KILITHANPATTARAI |
| OCCUPATION | : | HOUSE WIFE |
| AGE | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22nd day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கிளித்தான்பட்டறையில் வசித்து வருகிறேன். பணி ஏதும் செய்யவில்லை. அ.சா. 1 யை தெரியும். விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் எனது கணவர். தேதி மாதம் ஞாபகம் ,இல்லை. 2019 வருடம் எனது கணவர் சைக்கிளில் அவரது தங்கை வீட்டிற்கு சென்று வருவதாக மதியம் 2 மணியளவில் கூறிவிட்டு சென்றார். எனது கணவர் திரும்ப வீட்டிற்கு வரும் போது அனுஸ் ே◌ஹாட்டல் சத்திரம் பள்ளி அருகே பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக டெய்லர் சுப்ரமணி என்பவர் தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு நானும் எனது இரு மகளும் சென்று பார்த்ததோம். எனது கணவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார் பின்னார் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து போலிசார் எனது கணவரின் உடலை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவ இடத்தில் அரசு பேருந்து நின்று கொண்டிருந்ததது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு தகவல் அடிப்படையில் தெரியும் நேரடியாக எனக்கு தெரியாது.போலிசாரி என்னை விசாரிக்கவில்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | PARAMESWARI |
| FATHER'S NAME | : | SUBRAMANI |
| VILLAGE | : | KILITHANPATTARAI |
| OCCUPATION | : | NIL |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22th day of September 2025.

<u>**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது கிளித்தான்பட்டறையில் வசித்து வருகிறேன். பணி ஏதும் செய்யவில்லை. அ.சா. 1 யை தெரியும் எனது தங்கை . அ,சா,2 யை தெரியும் அவர் எனது அம்மா. விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் எனது அப்பா. 18.12.2019 தேதி இரவு 7 மணியளவில் நான் எனது தங்கை சசிகலா என்வரின் செங்குட்டை கிராமம் வீட்டில் இருந்த போது டெய்லர் சுப்ரமணி என்பவர் எனது தந்தைக்கு விபத்து ஏற்பட்டு தலையில் அடிப்பட்டதாக தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு நானும் எனது அம்மா, எனது தங்கையும் சென்று பார்த்ததோம். எனது அப்பா தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார் பின்னர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து போலிசார் எனது தந்தையின் உடலை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவம் தொடர்பாக எனது தங்கை சசிகலா புகார் மனு கொடுத்தார். பின்னர் விபத்து ஏற்படுத்தியவர் தென்காசியை சேர்ந்த முருகையா என்பதைக் கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

எனக்கு தகவல் அடிப்படையில் தெரியும் நேரடியாக எனக்கு தெரியாது.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | SENTHILKUMAR |
| FATHER'S NAME | : | SEKAR |
| VILLAGE | : | KILITHANPATTARAI |
| OCCUPATION | : | MECHANICAL |
| AGE | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22nd day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். லாரி மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். அ.சா. 1,2,3 யை தெரியும் அவர்கள் எனது உறவினர்கள். விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் எனது மாமானார். 18.12.2019 தேதி நான் சென்னையில் இருந்த போது என்னுடைய மச்சினிச்சி சசிகலா என்பவர் எனது மாமானாருக்கு விபத்கு ஏற்பட்டு இறந்து விட்டதாக தகவல் சொன்னார். நான் அன்றைய தினமே வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனை சென்று பார்த்த போது எனது மாமானார் இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். மறுநாள் மாமானாரின் உடலை பிரேத பரிசோதனை செய்து போலிசார் சாட்சியமாக விசாரித்தார்கள். பின்னர் அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு தகவல் அடிப்படையில் தெரியும் நேரடியாக எனக்கு தெரியாது.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | SASIKUMAR |
| FATHER'S NAME | : | SEKAR |
| VILLAGE | : | KILITHANPATTARAI |
| OCCUPATION | : | WELDING |
| AGE | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22nd day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கிளித்தான் பட்டடையில் வசித்து வருகிறேன். வெல்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா. 1,2,3,4 யை தெரியும் அவர்கள் எனது உறவினர்கள். விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் எனது மாமானார். 18.12.2019 தேதி நான் செங்குட்டையில் வெல்டராக பணியில் இருந்த போது டெய்லர் சுப்ரமணி என்பவர் எனது மாமானாருக்கு விபத்து ஏற்பட்டு இறந்து விட்டதாக தகவல் சொன்னார். நான் சென்று பார்த்த போது மாமானுருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார் சம்பவ இடத்தல் அரசு பேருந்து நின்று கொண்டிருந்தது. மாமனார் உடலை மீட்டு ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மறுநாள் மாமானாரின் உடலை பிரேத பரிசோதனை செய்து போலிசார் சாட்சியமாக என்னை விசாரித்தார்கள். விபத்தை ஏற்படுத்தியவர் தென்காசியை சேர்ந்த முருகையா என்பதை தெரிந்து கொண்டோன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு தகவல் அடிப்படையில் தெரியும் நேரடியாக எனக்கு தெரியாது. பிரேத பெற வேண்டி காவல் நிலையத்தில் கையொப்பம் பெற்றார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.6

| | | |
|---|---|---|
| NAME | : | DHACHANAMOORTHY |
| FATHER'S NAME | : | KASI |
| VILLAGE | : | VIZHUTHANGAL |
| OCCUPATION | : | POLICE |
| AGE | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22nd day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது விழதாங்கலில் வசித்து வருகிறேன். தமிழ்நாடு காவல் துறையில் வேலை செய்து வருகிறேன். அ.சா. 1,2,3,4,5 தெரியும் அவர்கள் எனது உறவினர்கள். விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் எனது மாமானார். 18.12.2019 தேதி நான் பனமடங்கியில் இருந்த போது என்னுடைய மச்சினிச்சி சசிகலா என்பவர் எனக்கு போன் மூலமாக எனது மாமனாருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது எனது மாமனாரை மீட்டு ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். நான் அன்றைய தினமே சென்ற பார்த்த போது எனது மாமனாரின் உடலை பார்க்கமுடியவில்லை. பின்னர் மறுநாள் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் சவக்கிடங்கில் பார்த்தேன். தலையில் அடிப்பட்டு இருந்தது. பின்னர் விபத்து ஏற்படுத்தியது அரசு பேருந்து என்றும் விபத்தை ஏற்படுத்திய நபர் தென்காசியை சேர்ந்த முருகையா என்பதையும் தெரிந்து கொண்டேன். பின்னர் எனது மாமானாரின் உடலை பிரேத பரிசோதனை செய்து போலிசார் என்னைசாட்சியமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு தகவல் அடிப்படையில்  தெரியும் நேரடியாக எனக்கு தெரியாது. பிரேத பெற வேண்டி காவல் நிலையத்தில் கையொப்பம் பெற்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 22.09.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.